# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**இந்திய-இலங்கை மின் கட்டமைப்பு இணைப்பு குறித்த மெய்நிகர் சந்திப்பு**

இந்திய இலங்கை மின் கட்டமைப்பு இணைப்பு தொடர்பான நடைமுறைகள் அமுலாக்கம் குறித்த கலந்துரையாடலுக்காக 2025 ஒக்டோபர் 30 ஆம் திகதி மெய்நிகர் மார்க்கமூடான அமர்வு ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்த இந்திய தரப்பினருக்கு இந்திய அரசாங்கத்தின் மின் சக்தி துறை அமைச்சின் செயலாளர் ஸ்ரீ பங்கஜ் அகர்வால் அவர்கள் தலைமை தாங்கியிருந்த அதேவேளை, இலங்கை அரசின் மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கே டி எம் உதயங்க ஹேமபால அவர்கள் இலங்கை பேராளர்களுக்கு தலைமை வகித்திருந்தார்.

2. குறித்த மின் கட்டமைப்பு திட்டம் தொடர்பான நடைமுறைகளை அமுலாக்குவதற்கான அம்சங்கள் தொடர்பாக இரு தரப்பினராலும் கலந்துரையாடப்பட்டது. புதுடில்லியில் 2025 ஜூன் 16ஆம் திகதி நடைபெற்றிருந்த கூட்டம் ஒன்றில் இந்திய இலங்கை மின் கட்டமைப்பு இணைப்பு தொடர்பான தொழில்நுட்ப ரீதியான அம்சங்களை இரு தரப்பினரும் உறுதிப்படுத்தியிருந்தமை நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

3. மின் பற்றாக்குறைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் இந்த இணைப்பு ஊடாக மின்சாரத்தினை இலங்கை இறக்குமதி செய்வதற்கும், அதேவேளை அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ளும் வகையில் புதுப்பிக்கத்தக்க மின் சக்தியினை ஏற்றுமதி செய்யவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன. அதுமட்டுமல்லாமல் சக்தி மூலம் மற்றும் ஏற்றுமதியினை விஸ்தரித்தல், மின் கட்டமைப்பு ஸ்திரத்தன்மையை மேம்படுத்தல் மற்றும் பிராந்திய மின் சக்தி சந்தையுடன் ஒன்றிணைதல் போன்ற புதிய வாய்ப்புகளையும் இது வழங்குகின்றது. இந்நிலையில் இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான மேலதிக கலந்துரையாடல்களில் இரு தரப்பினரும் தொடர்ந்து ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

*****

கொழும்பு
31 ஒக்டோபர் 2025